South West London
Health & Care
Partnership

# கனெக்டிங் யுவர் கேர்

## தனியுரிமை அறிக்கை – நேரடிப் பராமரிப்பு

**எளிய ஆங்கில விளக்கம்**

இந்தத் தனியுரிமை அறிக்கை உடல்நலப் பராமரிப்பு வழங்குபவர்கள் உங்களைப் பற்றிய தகவல்களை ஏன் சேகரிக்கிறார்கள் என்பதையும், அந்தத் தகவல்கள் எப்படி பயன்படுத்தப்படலாம் என்பதையும் பற்றி விளக்குகிறது. எங்களுடைய 'கனெக்டிங் யுவர் கேர்' திட்டம் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள தயவுசெய்து 'கனெக்டிங் யுவர் கேர்' துண்டுப் பிரசுரத்தையும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளையும் பாருங்கள் அல்லது இந்த வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்: www.swlondon.nhs.uk/connectingyourcare.

உங்களைக் கவனித்துக்கொள்ளும் உடல்நலப் பராமரிப்பு வல்லுநர்கள் நீங்கள் கடந்த காலத்தில் பெற்றுள்ள அல்லது தற்பொழுது பெற்றுக்கொண்டிருக்கின்ற ஏதாவது சிகிச்சை அல்லது பராமரிப்பு விவரங்களைக் கொண்டுள்ள உடல்நல மற்றும் பராமரிப்புப் பதிவேடுகளைப் பராமரிக்கிறார்கள். இந்தப் பதிவேடுகள் சாத்தியமுள்ள மிகச் சிறந்த பராமரிப்பை வழங்க உங்களுக்கு உதவுகின்றன.

NHS நோயாளி உடல்நல மற்றும் பராமரிப்புப் பதிவேடுகள் மின்னணுப் பதிவேடுகளாகவோ, அச்சிட்ட ஆவணங்களாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவோ இருக்கலாம், மற்றும் வேலை நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பம் கலந்த சேர்க்கை உங்கள் தகவல்கள் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைக்கப்படுவதை உறுதி செய்கின்றன. உங்களைப் பற்றி உடல்நலப் பராமரிப்பு வழங்குபவர்கள் வைத்திருக்கின்ற பதிவேடுகள் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

- முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் போன்ற உங்களைப் பற்றிய தகவல்கள்
- உடல்நல அல்லது பராமரிப்பு வழங்குநர் உங்களுடன் மேற்கொண்ட முன்பதிவுச் சந்திப்புகள், மருத்துவமனை வருகைகள், அவசரகாலச் சந்திப்புகள் போன்ற ஏதேனும் தொடர்புகள்
- உங்கள் உடல்நலம் மற்றும் பராமரிப்பு பற்றிய குறிப்புகள் / அறிக்கைகள் மற்றும் மதிப்பீடுகள்
- உங்களுடைய திட்டமிட்ட சிகிச்சை மற்றும் பராமரிப்பு பற்றிய விவரங்கள்
- இரத்தப் பரிசோதனைகள், எக்ஸ்-ரேக்கள் போன்ற ஆராய்ச்சி முடிவுகள்
- இதந உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள், உறவினர்கள் அல்லது உங்களுக்காக அக்கறை கொள்பவர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படுகின்ற தொடர்புடைய தகவல்கள்
- நீங்கள் ஒரு சமூகப் பராமரிப்பு மதிப்பீட்டைப் பெற்றிருப்பவராக இருந்தால்,

மதிப்பீட்டின் வகை மற்றும் அடுத்த திட்டமிட்ட மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும் தேதி.

உங்களைப் பற்றித் தெரிவிக்கப்படும் தகவல்கள் உங்களை விரைவாக மதிப்பீடு செய்து உங்கள் பராமரிப்பு பற்றிய மிகச் சிறந்த முடிவுகள் எடுக்க அல்லது திட்டங்களை உருவாக்க, உங்களைக் கவனித்துக் கொள்கின்ற உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள் அவர்களுக்குக் கிடைக்கும் சமீபத்திய தகவல்களைச் சிறப்பான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்ய அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நேரத்தில், ஒவ்வொரு பராமரிப்பு நிறுவனமும் உங்கள் பதிவேடுகளை நிர்வகிக்க ஒரு வேறுபட்ட அமைப்பைக் கொண்டுள்ளன, மற்றும் இந்தப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட தகவல்களை “நிகழ்நேரத்தில்”, அதாவது, உடனடியாக மின்னணு முறையில் பகிர்வதற்கு வழி எதுவும் இல்லை. அதாவது, ஒரு உடல்நல அல்லது சமூகப் பராமரிப்பு வல்லுநர் உங்களைப் பற்றிய கூடுதலான விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தால், அவர்கள் இந்தத் தகவல்களை தொலைபேசி அழைப்பு, தொலைநகல், அல்லது உங்கள் பதிவேடுகளின் அச்சு நகல்களைக் கோருதல் போன்ற பழமையான முறைகளைப் பயன்படுத்தியே கோர வேண்டும். இவை அனைத்துமே நேரம் எடுத்துக்கொள்ளும் செயல்முறைகள் ஆகும், இது தரவு இழப்புக்கு அல்லது வழங்கப்பட்ட தகவல்கள் விடுபடுவதற்கு காரணமாகலாம்.

இந்த வெவ்வேறு முறைகளில் ஒவ்வொன்றுக்கு இடையேயும் “இணைக்கப்பட்ட” மின்னணுக் காட்சியை வழங்குகின்ற ஒரு புதிய அமைப்பை கனெக்டிங் யுவர் கேர் அறிமுகப்படுத்தும். அதன் மூலம் உங்களைக் கவனித்துக் கொள்ளும் நபர்கள் நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு சேவையிடமிருந்தும் முக்கியமான தகவ்களை உடனடியாகப் பார்க்க முடியும், இது உங்கள் பராமரிப்பு பற்றிய சிறப்பான முடிவுகளை எடுக்க அவர்களுக்கு உதவுகிறது.

சட்ட ரீதியாக பின்வரும் 9 துணைப்பிரிவுகளில் நாங்கள் உங்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டும். வரையறைகளின் பட்டியலையும் கீழே நாங்கள் விவரித்துக் கூறியுள்ளோம்.

| | |
|---|---|
| 1) **கட்டுப்பாட்டாளர்**<br>தொடர்பு விவரங்கள் | |

| | |
|---|---|
| 2) **தரவுப் பாதுகாப்பு அதிகாரி** தொடர்பு விவரங்கள் | |
| 3) செயலாக்கத்தின் **நோக்கம்** | தனிநபருக்கு வழங்கப்படுகின்ற "நேரடிப் பராமரிப்பை" விரைவுபடுத்துவதற்காக தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும் – அதாவது, ஒரு நோயாளிக்கு அல்லது சேவையைப் பயன்படுத்துபவருக்கு உடனடிப் பராமரிப்பு அல்லது சிகிச்சையை வழங்குவதற்காக ஒரு உடல்நல அல்லது பராமரிப்பு நிறுவனம் அவருடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கும்போது.<br>**நேரடி நோயாளி கவனிப்பு** என்பது நோய் தடுப்பு, ஆராய்ச்சி மற்றும் சிகிச்சையுடன் சம்பந்தப்பட்ட ஒரு மருத்துவ, சமூக அல்லது பொது சுகாதார நடவடிக்கை மற்றும் தனிநபர்களின் துன்பத்தைத் தணிக்கின்ற ஒரு நடவடிக்கை எனெ2013 இல் கால்டிகாட் மதிப்பாய்வில் வரையறுக்கப்பட்டுள்ளது. இது தனிநபர்கள் செயல்படுவதற்கான திறனுக்கு ஆதரவளிப்பது மற்றும் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் அவர்களின் பங்கேற்பை மேம்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இது உள்ளூர் தணிக்கை வாயிலாக பாதுகாப்பான மற்றும் உயர்தரமான பராமரிப்பு மற்றும் சிகிச்சையை உறுதி செய்தல், இடரார்ந்த அல்லது பாதகமான சம்பவங்களை நிர்வகித்தல், தனிநபர்கள் தங்களுடைய பராமரிப்புக்காக சட்டப்பூர்வமான உறவுமுறையைக் கொண்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுசெய்த மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்களால் மேற்கொள்ளப்படுகின்ற விளைவுகளை அளவிடுதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. |
| 4) செயலாக்கத்திற்கான **சட்டப்பூர்வ அடிப்படை** | இந்த நிறுவனத்தில் நேரடிப் பராமரிப்பு வழங்குவதற்காகவும் பராமரிப்பாளர்களின் நிர்வாக நோக்கங்களுக்காகவும், மற்றும் மற்ற இடங்களில் நேரடிக் கவனிப்பு வழங்குவதற்கு ஆதரவாகவும் தனிப்பட்ட |

| | |
|---|---|
| | தரவுகளைச் செயலாக்குவது பின்வரும் நிபந்தனையின் விதிப்பிரிவு 6 மற்றும் 9 இன் கீழ் ஆதரிக்கப்படுகிறது: தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2018 / பொது தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிமுறை 2016:<br>*விதிப்பிரிவு 6(1)(e) '...பொதுமக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படுகின்ற அல்லது ஒரு உத்தியோகப்பூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்துகின்ற ஒரு பணியின் செயல்திறனுக்கு அவசியமானது... '.*<br>*விதிப்பிரிவு 9(2)(h) 'பணியாளரின் வேலை செய்யும் திறனை மதிப்பிடுவதற்கான தடுப்பு அல்லது தொழில்சார் மருந்து, **மருத்துவ நோயறிதல், உடல்நல அல்லது சமூகப் பராமரிப்பு அல்லது சிகிச்சைக்கான** ஏற்பாடு அல்லது உடல்நல அல்லது சமூகப் பராமரிப்பு அமைப்புகள் மற்றும் சேவைகளின் நிர்வாகம் **ஆகிய நோக்கங்களுக்கு அவசியமானது**..."*<br><br>உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்புச் சேவைகள் நேரடிப் பராமரிப்பு நோக்கங்களுக்காக தகவல்களைப் பகிர்வதற்கான சட்டரீதியான கடமைப்பொறுப்பின் கீழ் செயல்படுகின்றன.<br><br>"இரகசியத்தன்மையின் பொது சட்டக் கடமை" என மொத்தமாக அழைக்கப்படுகின்ற UK வழக்குச் சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட உங்கள் உரிமைகளையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். |
| 5) **தரவின் ஆதாரங்கள்** மற்றும் செயலாக்கப்பட்ட தரவைப் **பெறுபவர்கள் அல்லது பெறுபவர்களின்** | இந்தத் திட்டத்தின் முதல் பகுதிக்காக நாங்கள் உங்களுடைய அமைப்பை உள்ளூர் மருத்துவமனையுடன் இணைப்போம், அதன் மூலம் உங்கள் GP உங்கள் மருத்துவப் பதிவேடுகளைப் பார்க்க முடியும் மற்றும் உடல்நல வல்லுநர்கள் உங்கள் GP பதிவேட்டைப் பார்க்க முடியும். மற்ற சேவைகள் ஏற்கனவே இதைவிடக் கூடுதலான தகவல்களைப் பகிர்கின்ற சில பகுதிகளில், இந்தச் சேவைகள் முதலாவது கட்டத்தில் சேர்க்கப்படும். இதநிறுவனங்கள் சேரும்போது அல்லது இந்த |

| | |
|---|---|
| **பிரிவுகள்** | அமைப்பில் கணிசமான மாற்றம் மேற்கொள்ளப்படும்போது உங்களுக்கும் பொதுமக்களுக்கும் தகவல் தெரிவிக்கப்படும் அல்லது சமீபத்திய செய்திகளைத் தெரிந்துகொள்ள நீங்கள் எங்கள் வலைத்தளத்தையும் பார்வையிடலாம்: www.swlondon.nhs.uk/connectingyourcare.<br><br>முதலாம் கட்டத்தில் உள்ள நிறுவனங்களாவன<br>• SWL GP பிராக்டிசஸ் (கிராய்டன், மெர்டன், கிங்ஸ்டன், ரிச்மண்ட், சூட்டன் மற்றும் வாண்ட்ஸ்வொர்த் மாநகரம் ஆகியவற்றில் உள்ள GP க்கள்)<br>• கிராய்டன் ஹெல்த் சர்வீசஸ் NHS டிரஸ்ட்<br>• செயின்ட் ஜார்ஜ் ஹெல்த்கேர் NHS டிரஸ்ட்<br>• கிங்ஸ்டன் மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்<br>• தென் மேற்கு லண்டன் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மன நலடிரஸ்ட்<br>• உங்கள் உடல்நலப் பராமரிப்பு சமுதாய நலன் நிறுவனம்<br>• கிங்ஸ்டன் ராயல் மாநகர பெரியவர்களுக்கான சமூகப் பராமரிப்பு<br>• எப்சம் & செயின்ட் ஹெலியர் பல்கலைக்கழக மருத்துவமனை<br><br>தகவல் பகிர்வுத் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சூசன் பெரியவர்களுக்கான சமூகப் பராமரிப்பு போன்ற இடங்களில், இந்த நிறுவனங்கள் கட்டம் 1 இன் ஒரு பகுதியாக முன்கூட்டியே நடைமுறையில் சேர்க்கப்படலாம்.<br>இந்த முதலாவது கட்டத்துக்குப் பிறகு, இதர நிறுவனங்களையும் நடைமுறையில் சேர்க்க நாங்கள் படிப்படியாக 2ஆம் கட்டத்துக்குச் செல்வோம். அதன் மூலம் நீங்கள் லண்டனில் எங்கு சென்றாலும் உங்களுடைய உடல்நல மற்றும் பராமரிப்புப் பதிவேடுகள் உங்களுக்குக் கிடைக்கும். |
| 6) **விலகுவதற்கான உரிமை** | மின்னணுத் தகவல் பகிர்வு முறையில் இருந்து எப்பொழுது வேண்டுமானாலும் விலகிக்கொள்வதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது. விலகுவது எனநீங்கள் தீர்மானித்தால், இந்த அமைப்பு வாயிலாக உங்களைப் பற்றிய எந்தத் தகவலும் பகிரப்பட மாட்டாது.<br>உங்கள் தகவலைப் பகிர வேண்டாம் எனநீங்கள் விரும்பினால், ஒரு விலகுதல் படிவத்தை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இவை உங்கள் GP பிராக்டிஸ், நோயாளி ஆலோசனை மற்றும் உங்கள் உள்ளூர் மருத்துவமனையில் உள்ள தொடர்பு அதிகாரி ஆகியோரிடம் கிடைக்கின்றன, மற்றும் இதிலிருந்தும் நீங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்: www.swlondon.nhs.uk/connectingyourcare. |

| | |
|---|---|
| | இணைக்கப்பட்ட பராமரிப்பு பதிவேட்டைப் பார்ப்பதில் இருந்து விலகுவதால் உங்களுடைய தகவல்கள் உங்களைக் கவனித்துக்கொள்ளும் நபர்களுக்கிடையே பகிரப்படாது என்பது பொருள் அல்ல. இப்பொழுது நடைமுறையில் உள்ளதைப் போலவே தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் மற்றும் கடிதம் வாயிலாக அவை தொடர்ந்து பகிரப்படும். எனவே, உங்கள் பராமரிப்பு இப்பொழுது நடைமுறையில் உள்ளதிலிருந்து வேறுபட்டதாக இருக்காது – உங்கள் தகவல்களைப் பகிர்வதால் – குறிப்பாக அவசரகால சூழ்நிலைகளில் – உங்களுக்கு விரைவாகவும் "நிகழ்நேரத்திலும்" கிடைக்கின்ற பலன்களின் நன்மைகளை நீங்கள் பெற முடியாது என்பதே உண்மை.<br>உங்கள் மருத்துவ வரலாறு, உங்கள் சிகிச்சை, ஒவ்வாமைகள் மற்றும் மருந்துகள் பற்றி ஒவ்வொரு மருத்துவர் சந்திப்பின்போதும் அல்லது மருத்துவமனை வருகையின் போதும் உங்களைக் கவனித்துக்கொள்ளும் ஒவ்வொரு உடல்நல மற்றும் பராமரிப்பு வல்லுநரிடம் நீங்கள் சொல்ல வேண்டியிருக்கும். உங்கள் பராமரிப்பு பற்றிய முடிவுகள் எடுக்க நீண்ட நேரம் ஆகலாம் மற்றும் முன்பதிவுச் சந்திப்புகளும் பரிசோதனைகளும் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படலாம்.<br>உங்களைப் பற்றிச் சேமிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது பிரச்சனைகள் இருந்தால், தயவுசெய்து பார்வையிடவும்: www.swlondon.nhs.uk/connectingyourcare அல்லது எங்களை இந்த வலைத்தளத்தில் தொடர்புகொள்க:<br>மின்னஞ்சல்: connectingyourcare@swlondon.nhs.uk.<br>தொலைபேசி: TBC |
| 7) **ஆட்சேபம் தெரிவிப்பதற்கான உரிமை** | விதிப்பிரிவு 21 GDPR இன் கீழ் செயலாக்கம் செய்யப்படுகின்ற சில அல்லது அனைத்துத் தகவல்களுக்கும் ஆட்சேபம் தெரிவிப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது. தயவுசெய்து இந்த தனியுரிமை அறிக்கையின் பிரிவு 6 ஐப் பார்க்கவும் அல்லது மாற்றாக, கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ளஉங்களுக்குப் பராமரிப்பு வழங்கும் நிறுவனத்தில் உள்ள தரவுப் பாதுகாப்பு அதிகாரியை தொடர்புகொள்ளவும். இது ஆட்சேபம் தெரிவிப்பதற்கான ஒரு உரிமை என்பதையும், இது பரிசீலிக்கப்படும் என்பதையும் நீங்கள் |

| | |
|---|---|
| | தெரிந்துகொள்ள வேண்டும்; இது ஒவ்வொரு சூழ்நிலையிலும் உங்கள் விருப்பங்கள் இசைவளிக்கப்படுவதற்கான முழு உரிமையை நீங்கள் பெற்றிருப்பதைப் போல் ஆகாது. |
| 8) **அணுகலுக்கான மற்றும் திருத்துவதற்கான உரிமை** | உங்களைப் பற்றிப் பகிரப்படும் தரவுகளைப் பார்ப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது. இது 'ஆய்வுக்குட்படுநரின் அணுகலுக்கான உரிமை' எனப்படுகிறது. இந்தத் தகவலுக்காக ஒரு பராமரிப்பாளரிடம் நீங்கள் கோரிக்கை விடுக்க முடியும். உங்கள் உடல்நல அல்லது பராமரிப்பு வழங்குபவர் உங்களைப் பற்றிய தகவல்களை வைத்திருந்தால், மற்றும் நீங்கள் ஆய்வுக்குட்படுநரின் அணுகல் கோரிக்கை ஒன்றை விடுத்தால் அவர்கள்:<br>• அதைப் பற்றி உங்களுக்கு விளக்கம் அளிப்பார்கள்<br>• என்ன விஷயங்கள் வைக்கப்பட்டுள்ளன என்பதை உங்களுக்குச் சொல்வார்கள்<br>• அது யாருடன் பகிர்ந்துகொள்ளப்படும் என்பதை உங்களுக்குச் சொல்வார்கள்<br>• தகவல்களின் ஒரு நகலை புரிந்துகொள்ளக்கூடிய வடிவத்தில் உங்களுக்குக் கொடுப்பார்கள்.<br><br>நீங்கள் 'ஆய்வுக்குட்படுநர் அணுகல் கோரிக்கை' ஒன்றை விடுக்க விரும்பினால், உங்கள் உடல்நலப் பராமரிப்பு வழங்குநரின் தரவுப் பாதுகாப்பு அதிகாரியை எழுத்து மூலமாக நீங்கள் தொடர்புகொள்ள வேண்டும்.<br>நீதிமன்றத்தால் ஆணையிடப்படா விட்டால் தவிர சரியான மருத்துவப் பதிவேடுகளை நீக்குமாறு கோருவதற்கான உரிமை உங்களுக்கு இல்லை. |
| 8) **தக்கவைப்புக் காலம்** | சட்ட மற்றும் தேசிய வழிகாட்டுதலுக்கு இணங்க தரவுகள் வைத்திருக்கப்படும்.<br>https://digital.nhs.uk/article/1202/Records-Management-Code-of-Practice-for-Health-and-Social-Care-2016. |
| 9) **புகார் அளிப்பதற்கான உரிமை**. | தகவல் பொருத்தமற்ற முறையில் பகிரப்பட்டுள்ளது என நீங்கள் கருதினால், உங்கள் தரவுகளைப் பயன்படுத்துவது மற்றும் பகிர்வது தொடர்பாக புகார் அளிப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. ஒவ்வொரு பராமரிப்பு நிறுவனமும் தங்களுக்கென பிரத்தியேக புகாரளித்தல் செயல்முறையைப் பின்பற்றுகின்றன, மற்றும் நீங்கள் அவர்களை நேரடியாகத் தொடர்புகொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| | பின்வரும் இணைப்பு வாயிலாக தகவல் ஆணையத்தின் அலுவலகத்தையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம் https://ico.org.uk/global/contact-us/<br>அல்லது அவர்களுடைய உதவிமையத் தொலைபேசி எண்ணில் அழைக்கலாம்: 0303 123 1113 (உள்ளூர் கட்டணம்) அல்லது 01625 545 745 (தேசிய கட்டணம்). |

*"இரகசியத்தன்மையின் பொது சட்டக் கடமை", பொதுச் சட்டம் பாராளுமன்றச் சட்டத்தைப் போல ஒரே ஆவணமாக எழுதப்படவில்லை. அது நீதிபதிகளால் தீர்மானிக்கப்படும் முந்தைய நீதிமன்ற வழக்குகளின் அடிப்படையில் அமைந்த ஒரு சட்டம் போன்றதாகும்; எனவே, அது 'நீதிபதியால் உருவாக்கப்பட்டது' அல்லது 'வழக்கு' சட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்தச் சட்டம் முந்தைய வழக்குகளுக்கு ஒரு மேற்கோளாக பயன்படுத்தப்படுகிறது, எனது பொதுச் சட்டம் முன்னோடிச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்தது என்றும் சொல்லப்படுகிறது.

பொதுவான நிலை என்னவெனில் இரகசியமாக வைக்கப்பட வேண்டிய கடமை பொருந்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழ்நிலைகளில் தகவல் தெரிவிக்கப்பட்டால், தகவல் தெரிவிப்பவரின் ஒப்புதல் இல்லாமல், அல்லது ஒரு ஒப்புதல் அல்லது சட்டப்பூர்வ நோக்கம் இல்லாமல் அந்தத் தகவலை சாதாரணமாக தெரிவிக்க முடியாது.